ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சரணம்

விநாயகர் காப்பு

கையிலைபதி ஈஸ்வரரை கருணைமிகு சங்கரரை
காமாட்சி நாதரவர் குருசந்த்ர சேகரரை
கனிந்துருகி நூற்றெட்டு அந்தாதி கவி தொடுக்க
கருத்தினிலே குடியிருப்பாய் கணபதியே பதம் தொழுதோம்.

-----------------------------------------------------------------------------

வாழியநீர் ஜகத்குருவே வாழிய நீர் வாழியவே
ஏழுலகம் போற்றிடுமோர் பெருங்குருநீர் வாழியவே
சூழவரும் இன்பமெலாம் தந்திடுவீர் வாழியவே
ஆழி முதல் வானுயர ஓங்குகுரு வாழியவே. 1

"வாழி" என வாழ்த்துரைக்க வாய்க்கொடுத்தோய் வாழியநீர்
ஏழ்பிறப்பின் புண்ணியத்தால் உமையடைந்தோம் வாழியநீர்
ஊழ்வினைகள் ஒரு கோடி ஓட்டிவிட்டோய் வாழியநீர்
ஆழ்மனத்தே குடி கொண்டே கொடுத்திடுவீர் தரிசனமே 2

தரிசனமே தந்தெமையே ஆட்கொளவே அவதரித்தீர்
குருநாதா குறைவில்லா நிறைபொருளாய் அவதரித்தீர்
ஒருபோதும் உமை மறவா நிலைதரவே அவதரித்தீர்
கருணைமிகு சங்கரராய் கலியுகத்தில் அவதரித்தீர் 3

அவதரித்தீர் ஜயவருடம் வைகாசி அனுஷமதில்
அலர்ந்ததுவோ அன்னைமகா லட்சுமி எனும் தாய் வயிற்றில்
அருந்தவத்து தந்தையவர் சுப்ரமண்ய சாஸ்திரியார்
அழைத்தபெயர் சுவாமிமலை நாதனுமாம் சிறுவயதில் 4

சிறுவயதுச் சம்பவங்கள் நீர் சொல்வீர் ஏராளம்
சீர்தூக்கி பார்க்கையிலே புரிந்திடுமாம் உள் ஆழம்
பேராசை பெருநட்டம் மரநாயின் திண்டாட்டம்
தாராளம் நீர்வள்ளல் தந்ததினால் பொன்வளையல் 5

பொன்வளையல் உவந்தளித்தீர் பொன்னுசாமி பறித்திடவே
அன்றுமுதல் கொடுக்கின்றீர் இன்றுவரை ஓய்ந்தீரா
என்று உமைக் கண்டவர்கள் இல்லையெனத் திரும்பிவிட்டார்
பொன்கேட்டோர் பொன்கொண்டார் அருள்கேட்டோர் அருள்கொண்டார் 6

அருள்கொண்டோர்க் கருள்புரியும் அம்பலத்து அரசர்தனை
ஆலயமாம் சிதம்பரத்தில் கண்டிடவே தந்தையுடன்
அன்றொருநாள் சென்றீராம் விழாக்காண விழைந்தீராம்
நன்றெனவே இரவுவர விழியுறக்கம் கொண்டீராம் 7

கொண்டீராம் விழியுறக்கம் விழித்தீராம் காலைவர
கொண்டீராம் மனக்கலக்கம் விழாக்காண வில்லையென
கேட்டீராம் தந்தையிடம் ஏன்மறந்தீர் எழுப்ப என
சொன்னாராம் தந்தை நாம் தப்பித்தோம் நன்றென்றே 8

நன்றென்றே தப்பித்தீர் தீவலையில் வீழாமல்
அன்றந்த தீப்பிடித்த ஆலயத்துச் செல்லாமல்
என்றந்த வேதாந்தம் உமக்கில்லை யாம்நம்போம்
தீயேந்தும் தில்லையர் நீர் உமையெங்கே தீ நெருங்கும்? 9

நெருங்கியுமைப் பள்ளியிலே வினவினராம் அதிகாரி

நறுக்கெனவே பதிலுரைத்தீர் நீர்படியா பாடமதில்
நின்றனராம் வியப்புறவே பரம் பொருளைப் புரியாமல்
இன்றெமக்குப் புரியவைத்தீர் யாம் செய்த புண்ணியமே 10

புண்ணியம் செய் தந்தையவர் ப்ரம்மஉப தேசம் செய,
அன்றிருந்த பரமகுரு அளித்தாராம் அருளாசி
பின்னர்வரு உலககுரு உமைத் தெரிந்தே மகிழ்ந்தாரோ
புவனம்பதி நான்குபுகழ் ஈசரென அறிந்தாரோ 11

அறிந்தாரா தமையருமை ஆதிசிவன் தானென்று
அறிந்தாலே கொடுப்பாரா அன்றொருநாள் அடி ஒன்று
அறிந்திடத்தான் கேட்டீராம் தண்டித்தீர் ஏன் என்று
மறந்திட்டாய் அனுட்டானம் அடித்திட்டேன் அதற்கென்றார் 12

அதற்கென்றா அடித்திட்டீர் ஆய்ந்துநீர் பாராமல்
அனுட்டானம் முடித்திட்டேன் ஆற்றினிலே என்றிடவே
அருந்தமயர் கண்டாராம் நெற்றியிலே திருநீற்றை
அன்புருவாய் அணைத்தாராம் புரிந்திட்டேன் தவறென்றே. 13

தவறாமல் அனுட்டானம் தினம்புரியும் நல்பழக்கம்
தொடங்கிட்டீர் அந்நாளே இந்நாளும் புரிகின்றீர்
தாரணிக்கு உபதேசம் வாயளவில் தானில்லை
தான் வாழ்ந்து காட்டிடுவேன் என வாழ்ந்து காட்டுகின்றீர் 14

காட்டுகின்றீர் கருணைக்கோர் அவதாரம் இதுவென்றே
காட்டிட்டீர் குருபீடம் அலங்கரிக்கும் நாள் முன்பே
ஏந்திட்டீர் முறுக்கினுக்கே கையையோர் மாதிடத்தில்

தந்தாராம் இரு முறையே கேட்டீராம் மும்முறையும் 15

மும்முறைதான் கேட்டவுடன் இல்லையெனச் சொல்லிடவே
நான்வாரேன் உன் இலமே என்றீராம் கோபமுடன்
நீவாரா திருந்திட்டால் எனக்கென்ன போ என்றார்,
யாருன்னை அழைத்திடுவார் பூர்ணகும்ப மேந்தி என்றார் 16

ஏந்தி பூர்ண கும்பமதை அழைக்கும் நாள் வந்ததுவாம்
ஏங்கித்தான் நின்றாராம் அம்மாதும் அந்நாளே
ஓங்குபுகழ் சங்கரராய் அவர் வாயில் நின்றீராம்
ஏங்காதே என்றீராம் கருணைமிகு பெருமகராய் 17

பெருமகராம் குருவுடனே பரமகுரு இருபேரும்
ஒருமையுறக் கலந்தாராம் கலவையெனும் திருத்தலத்தில்
"குருஇவரோ" மறைபோற்றும் ஞானகுரு யாமிவர்க்கு
உரைத்திடத்தான் ஒன்றுண்டோ எனசித்தி அடைந்தாராம் 18

அடைந்தாராம் சித்தியந்த கலவையெனும் திருத்தலத்தில்
விரைந்தாராம் தேவரொடு முனிவரெல்லாம் நிலம்நாடி
நிறைந்தாராம் வேதமொடு நாதமும்தான் ஒலி முழங்க
மறந்தாராம் விண்ணுலகை நுகர்ந்தாராம் பால் மணத்தை 19

பால் மணமே மாறாத பருவமதாம் பதிமூன்றில்
புவனமது பதினான்கும் பெருங்களிப்பில் ஆழந்திடவே
பூமாரி பெய்தங்கு வானவரும் வாழ்த்திடவே
பிறைசூடும் எம்பெருமான் குருபீடம் அலங்கரித்தீர் 20

அலங்கரித்தீர் அறுபத்து எட்டாகும் பீடமதை
ஆண்டதுவாம் பராபவத்து மாசியிலே நாலாம்நாள்
பூர்வபட்ச திரிதிகைதிதி சித்தயோக வெள்ளி தினம்
சேர்உத்ரட் டாதி எனும் நந்நாளாம் பாரினுக்கே. 21

பாரினுக்கே ஓர் இறைவர் எம்பெருமான் பரமசிவர்
தாரணிக்கே ஓர் குருவாய் வந்தகுரு சங்கரராய்
பேர்விளங்கு குருசந்த்ர சேகரராய் கலிபுகழ
பார்புகழும் காஞ்சிவளர் காமகோடி குருவானீர் 22

குருவானீர் புவிகாக்கும் பாலகுரு உருவானீர்
திருநாளில் தொடங்கிட்டீர் திக்விஜய யாத்திரையை
திருவானைக் காவலிலே குடமுழுக்கு முதல்கண்டீர்
ஒருயானைத் தனிலேறி கும்பகோணம் வலம் வந்தீர் 23

வலம்வந்தே இளையாத்தாங் குடி வந்து களித்தீராம்
நிலைத்தீராம் மகாஇந்த்ர மங்கலத்தில் நிலைத்தீராம்
தெளிந்தீராம் கலைபலவும் கற்றினிதே தெளிந்தீராம்
ஒளிர்ந்தீராம் ஞானத்தில் ஒளிவிளக்காய் ஒளிர்ந்தீராம் 24

ஒளிர்ந்திடுமோர் ஆதவன்போல் ஒளிவீசும் முகமலரும்
தெளிந்திடுமோர் ஓடையைப் போல் தெளிவுற்ற சிந்தனையும்
சொலிதிடுமோர் தங்கமதில் வார்த்தெடுத்த உடலழகும்
கலந்திடவே வளர்ந்தீராம் பொழுது ஒரு வண்ணமுமாய் 25

வண்ணமுடன் ஈசருக்கு புஜைசெயத் தொடங்கிட்டு
எண்ணமெலாம் ஒருமுகமாய் அகநோக்கில் இருந்திட்டு

புண்ணியர் நீர் நிதம்செய்த கோலவிழாக் கண்ணுற்றோர்
கண்குளிரக் கண்டுமையே தெய்வமெனப் பணிந்தாராம்  26

பணிந்திட்ட பக்தரெல்லாம் பெற்றதுவோ பேரருளாம்
புனிதமுறப் பருகியதோ நீர்கொடுத்த நீரமுதாம்
நினைந்துமன முருகியதோ உம்பாத தரிசனமாம்
கனிந்துநித மேங்கியதோ கடைக்கண்ணின் நோக்கினுக்காம்  27

நோக்கிடுவார் நோக்கினுக்கே நலம்பெற நீர் நடத்திட்ட
பூக்கள்சொரி பூஜைபல பகன்றிடலாம் ஏராளம்
பத்தெட்டாம் ஆண்டுமுனம் பாங்குடனே தொடங்கிட்டீர்
பத்தெட்டாம் பட்டவிழாக் காண்கையிலும் புரிகின்றீர்  28

புரிந்திடுவீர் வேதகுரு வியாசருக்கு ஒரு பூஜை
இருந்திடுவீர் திங்களொரு நான்கங்கே தினபூஜை
நாயகியர் மலைமகற்கும் அலையுடனே கலைமகற்கும்
நாளொன்பதில் செய்வீர் நவராத்திரி பூஜையுமே. 29

நவராத்திரி பூஜையுடன் நவாவரண பூஜையுமாம்
நடத்திடுவீர் நலமுடனே பிரதோட பூஜையதும்
நாளதுவாம் தைப்பொங்கல் சூரியற்கு ஒரு பூஜை
நடத்திடுவீர் கலவையவளர் குருமகர்க்கோர் பூஜையுமே. 30

பூஜித்தே புண்ணியத்தை பக்தருக்கு அளித்திடுவீர்
பழமுடனே அட்சதையும் பூவகையும் கொடுத்திடுவீர்
பழவினைகள் போக்கிட நல் புனிதநீர் பரிந்தளிப்பீர்
பழுதில்லா பெருமகராய் உயர்ந்தீராம் பெருமையுடன்  31

பெருமையுடன் பக்தரெல்லாம் "பெரியவாள்" எனச் சொல்லி
பரிவுடனே அழைத்திடவே பெருங்குருவாய் உருவானீர்
புவிகாக்கத் தொடங்கிட்டீர் புனிதமிகு யாத்திரையை
திருவானைக்காவலுக்குத் தரிசனமாய்ப் புறப்பட்டீர் 32

புறப்பட்டே அடைந்திட்டீர் திருவானைக்காவலினை
பதித்திட்டீர் தாடங்கம் திருக்கரத்தால் தேவியற்கே
பார்த்திட்டீர் ப்ரம்மத்தை நெரு ஊரில் பயணத்தே
தொடர்ந்திட்டீர் யாத்திரையைப் பயன்பலவும் நீர் புரிந்தே 33

நீர்புரிந்த விந்தையெலாம் நினைகொளவே இனிப்பவையாம்
ஓர் இரண்டு உரைத்திடலாம் எண்ணிக்கை கோடியுமாம்
நாற்பதுவும் முடியாத குருவயதில் நடந்தவையாம்
கேட்டிடும் எம் செவிகளுக்கே அவைத்தேனாய் இனிப்பவையாம் 34

இனித்திடுமாம் உம்பாத தரிசனத்தைக் களித்திடவே
உவந்தினிதே வந்தவருள் பிறமதத்தார் சிலருண்டாம்
அவ்வண்ணம் மூவர்தான் பிறைநோன்பு நோற்றிடுமோர்
சமயத்துச் செல்வரெனச் சொல்லித்தான் வந்தாராம் 35

வந்துமையே பணிந்தாராம் களித்தாராம் தெய்வமுமை
தந்தீராம் தரிசனத்தை அளித்தீராம் அருளாசி
வியந்தாராம் வந்தவரும் இறைஇவரே என்றாராம்
பயன் இவரின் தரிசனமே பிறப்பினுக்கும் என்றாராம் 36

என்றும் உம் யாத்திரையில் பின்வருமாம் நாயொன்று

உண்ணாது ஏங்கிடுமாம் உமைக்கண்டே உண்ணிடுமாம்
பின்னாலே தொடர்ந்திடுமாம் பாதையெலாம் முன்செலுமாம்
கண்காணா திடம்விட்டும் திரும்பியதாம் சன்னதிக்கே 37

சன்னதிக்கு முன்னாலே குருபீடம் அலங்கரித்தோர்
முன்னமிரு நூறாண்டு எழுந்தருளாச் சிதம்பரத்தை
முன்காலைப் பொழுதினிலே அடைந்தீராம் பயணமதில்
நின்றீராம் நட்டுவன்முன் பணிந்தாராம் பக்தரெலாம் 38

பக்தரெலாம் வியந்தாராம் பரம்பொருளாம் உமைக்கண்டு
அம்பலத்தே ஆடுகின்ற வானவரும் அங்கிருக்க
இங்கொருவர் வந்தாரே எவரிதிலே கையிலைபதி
எனமயங்கி நின்றாராம் பெருங்களிப்பு பெருக்கோடே 39

பெருக்கோடும் புனிதநதி கங்கைவளர் காசிநகர்
திருக்கோலம் தன்னுடனே உமைஈசர் தரிசிக்க
திருவுள்ளம் கொண்டவராய் சங்கல்பம் உடனெடுத்து
தெரிந்தீராம் வழிப்பாதை திரு அனந்த கிருஷ்ணரிடம் 40

கிருஷ்ணபிரான் அரச்சுனர்க்கு பாரதத்தில் சாரதி போல்
கிருஷ்ணரிவர் குருஉமக்கு பாதைசென்ற முன்னோடி
தெரியாதா குருமகர்க்கு ஈரேழு புவனவழி
தெரியாத மாந்தர்க்கு நீர் செய்த மாயசதி 41

மாயம்தான் செய்திடுவீர் புறக்கண்ணை மறைத்திடுவீர்
ஈசர்தான் இல்லையெனும் மனப்பிரமைக் கொடுத்திடுவீர்
ஏய்த்திடத்தான் ஆள்கிடைத்தால் ஏய்த்துமனம் களித்திடுவீர்

ஏமாற நாமில்லை வேறிருந்தால் போய்ப்பாரும் 42

போய்ப்பார்த்தீர் ஸ்ரீசைலம் பெருங்காட்டு வழிப்பயணம்
தரிசித்தீர் தென்கயிலை சோதிலிங்கம் மலையேறி
அடைந்திட்டீர் திரிவேணி சங்கமத்தை உடன் நடந்து
புகுந்தீராம் காசிநகர் ராஜமரி யாதையுடன் 43

ராஜமரி யாதையுடன் காசிநகர் வலம் வந்தீர்
தரிசித்தீர் ஆலயங்கள் தினம் செய்தீர் பூஜையுமே
அளித்திட்டீர் அருள்வாக்கு பல்கலைக்கோர் கழகமதில்
மலர்ந்திட்டீர் திருவாக்கு மாலை தினம் பக்தருக்கே 44

பக்தருக்கு அன்புடனே ஆசியருள் அளித்திட்டே
பிரிந்திட்டீர் காசிநகர் பிரியதோர் விடைகொண்டே
பின்கண்டீர் புத்தகயா வங்கமொடு ஆந்திரமும்
வந்திட்டீர் தமிழகமே காமாட்சி காஞ்சி நகர் 45

காஞ்சிவளர் காமகோடி பீடபதி யானகுரு
காமாட்சி தேவியுடன் குருபதமே தரிசித்து
கூத்தரவர் திருத்தலமாம் தில்லைநகர் திரும்பியுடன்
சேர்ந்தீராம் சேதுநகர் இராமநாதர் திருத்தலமே 46

திருத்தலமாம் சேதுவிலே தரிசித்தீர் ஈஸ்வரரை
திரிவேணி சங்கமநீர் அளித்திட்டீர் ஆங்கவர்க்கே
தரணியெலாம் காத்திடவே தொடங்கிட்ட புனிதமிகு
காசிகங்கா யாத்திரையை முடித்திட்டீர் விஜயமுடன் 47

விஜயமுடன் யாத்திரையை முடித்திட்ட மகிழ்வோடே
விரதமொரு மூவிரண்டு திங்களுற்றீர் மௌனமுடன்
துரிதமெனத் திட்டங்கள் பல தீட்டிச் சிந்தையதில்
ஒரு மனதாய்ப் புறப்பட்டீர் புத்துலகம் உருவாக்க 48

உருவாக்க புத்துலகம் தீட்டிட்ட திட்டமெலாம்
ஒரு கோடி பகன்றிடலாம் பட்டியலாய் நீண்டுவரும்
குருமகராய் அவதரித்தீர் புவனமதில் நீரதற்கே
முடித்திட்டீர் நினைத்ததெலாம் நலம்பெறவே பாங்குடனே 49

பாங்குடனே ஆலயங்கள் புதுமையுறச் செய்திட்டீர்
ஆங்கெல்லாம் குடமுழுக்கு விழாக்காண வைத்திட்டீர்
ஓங்குபுகழ் தஞ்சையிலும் திருவானைக் காவலிலும்
காமாட்சி காஞ்சியிலும் கண்டீராம் குடமுழுக்கே 50

குடமுழுக்கு கண்டாலே போதாது ஆலயங்கள்
தினமுழுக்கு காண்பதற்கும் வழிச் செய்தீர் உடனுடனே
அனுதினமும் பூஜைசெய சாஸ்வதமாய் நிதிவளர்த்து
நிரந்தரமாய் நிதிகொடுக்கும் நல்திட்டம் நீர் கொடுத்தீர் 51

நீர்கொடுத்த நல்லதொரு நலம் பயக்கும் திட்டத்தால்
நீர்கொடுக்கும் கிணறுகுளம் தூய்மை பெறச் செய்திட்டீர்
பால்கொடுக்கும் பசுகாக்கும் காப்பகங்கள் நிறுவிட்டீர்
காய்பழங்கள் கழித்தோல்கள் பசுக்களிக்க பரிந்துரைத்தீர் 52

பரிந்துரைத்தீர் "நித்தமொரு" பிடி அரிசித் திட்டத்தை
தெரிந்துரைத்தீர் "வாரவழிபாடு" எனும் திட்டத்தை

அறிந்துரைத்தீர் திருமுறைகள் தினம் ஓதும் திட்டத்தை
உவந்துரைத்தீர் நோயுற்றோர்க் கிதமளிக்கும் திட்டமுமே 53

திட்டமிட்டுச் சேர்த்திட்டீர் சைவமொடு வைணவத்தை
ஊட்டமிட்டு வளர்த்திட்டீர் ஒருமையெனும் தத்துவத்தை
பாடவிட்டு மகிழ்ந்திட்டீர் பாவையொடு எம்பாவை
சேரவிட்டுக் களித்திட்டீர் ஒருமேடை இருதுருவம் 54

இருதுருவம் முத்துருவம் பலதுருவம் எனப்பிரிந்த
பலசமயம் தனை இணைத்து ஓர் குடைக்கீழ் வரச்செய்து
எம்பெருமான் நீர் ஒன்றே பரம்பொருளாம் என உணர்த்தி
சமயத்தால் பிரிந்தோரை சேர்ப்பித்தீர் கனிவுடனே 55

கனிவுடனே கொடுத்தீட்டீர் அத்வைத தத்துவத்தை
இனிதெனவே அளித்திட்டீர் அதற்கான விளக்கத்தை
பணிசெய்தே புகுத்திட்டீர் பக்தி எனும் பக்குவத்தை
இணையில்லா துயர்ந்திட்டீர் பல்லோரும் போற்றிடவே 56

போற்றிடவே பணித்திட்டீர் உருத்திரரை மாயவரை
சாற்றிடவே நவின்றிட்டீர் நாமமொடு மந்திரத்தை
ஏற்றிடவே அழைத்திட்டீர் தேவியொடு ஈஸ்வரரை
நூற்றுவகை வழிச்சொன்னீர் ஏற்றமுற வாழ்வினிலே. 57

வாழ்வினிலே வளம்பெறவே செய்வித்தீர் அருச் சனைகள்
தாழ்வில்லா துயர்ந்திடவே செய்வித்தீர் யாகவகை
ஓய்வில்லா துழைத்திட்டே பரப்பிட்டீர் பண்பாட்டை
தொய்வில்லா மனத்தோடே உயர்ந்திட்டீர் நிறைபொருளாய் 58

நிறைபொருளே நானிலத்தோர் நலம் பெறவே நீர்புரிந்த
நற்செயல்கள் நூறுவகை நவின்றிடலாம் நயம்படவே
நன்றவற்றுள் நிகரில்லா நற்பணியாம் நாதர்நீர்
நாலுமறை நலம்காக்க நிதமிழைக்கும் நற்றவமே 59

நற்றவத்தீர் வேதம்நீர் வேதத்து நாயகர்நீர்
சாற்றியுமைப் போற்றிடுவார் வேதியரின் நாயகர்நீர்
கூற்றியிடம் சேர்ந்தவளாம் மாதொருவள் நாயகர்நீர்
ஏற்றியுமைப் பணிபவராம் மாத்தவத்தோர் நாயகர்நீர் 60

நாயகர்நீர் வேதம் தான் வாழ்வினுக்கே துணை என்றீர்
நிதமதனை வித்திட்டு உரமிட்டு வளர்த்திட்டீர்
நெடுந்தருவாய் வளர்த்ததனை கனிகொடுக்க வைத்திட்டீர்
நற்கனியை நானிலத்தோர் சுவைத்திடவே அளித்திட்டீர் 61

அளித்திட்டீர் வேதத்தை காத்திடுமோர் நிதியமைப்பு
அமைத்திட்டீர் வேதமதை புகற்றிடவே பலவகுப்பு
எழுப்பிட்டீர் பள்ளிபல படிக்க வரும் பாலருக்கு
அளித்திட்டீர் பட்டமொடு பலபரிசும் பயின்றோர்க்கே 62

பயின்றுமறை தேர்ந்தோரை ஏற்றமுடன் மதித்திட்டீர்
பொன்பொருளும் தோடாவும் பரிவுடனே பரிசளித்தீர்
பல்லோரும் புகழ்ந்திடவே போற்றிட்டீர் சால்வைகளும்
பாரினுக்கே இவர் பணிதான் பயனெனவே புகழ்ந்திட்டீர் 63

புகழ்ந்திட்டீர் வேதத்து விற்பன்னர் அவைகூட்டி

மகிழ்ந்திட்டீர் வாதமொடு சர்ச்சைகளும் அவர் நடத்த
களித்திட்டீர் அவைநடுவே நாயகராய் நீர்விளங்க
கடந்திட்டீர் குருவயதாம் அறுபதுவும் நிரம்பியுமே 64

நிரம்பியுமே அறுபதினை நீர்கண்டீர் நிறைவுவிழா
நகரதுவாம் சென்னையினை பின் அடைந்தீர் பெரும்குருவாய்
நிதம்மாலை அமுதெனவே மொழிந்திட்டீர் அருள்வாக்காய்
நல்வழியில் எமைத்திருப்ப உழைத்திட்டீர் நித்தமுமே 65

நித்தமுமே எமக்குழைத்த குருபீட ஐம்பதினை
நத்தலமாம் கலவையிலே நீர்கண்டீர் பொன்மயமாய்
நித்தமொரு தலமெனவே தென்னாடு தொடங்கிட்டு
நடந்திட்டீர் ஆந்திரமும் தமிழகமும் காஞ்சிவரை 66

காஞ்சியிலே சிலகாலம் கார்வேட்டில் சிலகாலம்
கலவையிலே சிலகாலம் கடந்திட்டீர் பலகாலம்
கருணைமிகு சங்கரராய் கலிபோற்றும் தெய்வமுமாய்
குருமணியாய் ஒளிர்ந்திட்டீர் ஒளிமயமாய் உலகெங்கும் 67

உலகாளும் குருமகராய் கண்டிட்டீர் எண்பதினை
பனித்திங்கள் பிறைதன்னை எண்ணிட்டீர் ஆயிரமே
புவிகாக்கப் பெருந்தவங்கள் புரிந்திட்டீர் கோடியுமே
பேசிடுமோர் தெய்வமென இருந்திட்டீர் கலியுகமே 68

கலயுகத்தே "கண்கண்ட தெய்வமெ"னப் போற்றிடவே
கருணைமிகு "காஞ்சிமகா முனிவரெ"னப் போற்றிடவே
நானிலத்தோர் "நடமாடும் தெய்வமெ"னப் போற்றிடவே

நடைபயின்றே புண்ணியநல் பாரதமே வலம்வந்தீர் 69

வலம்வரவே பின்னமொரு பயணம்தான் புறப்பட்டீர்
நிலமதுவாம் ஆந்திரமும் கன்னடமும் கடந்திட்டீர்
நல்லமகா ராஷ்டிரமும் அடைந்தங்கே தில்லையற்கே
நிறுவிட்டீர் சிதம்பரமும் வடதிசைக்கோர் ஆலயமாய் 70

ஆலயத்து தெய்வம் நீர் கண்டிட்டீர் பவழவிழா
அடைந்திட்டீர் தமிழகமும் காஞ்சிநகர் இடம்கொண்டே
கடந்திட்டீர் தொண்ணூற்று மூன்று எனும் குருவயதும்
காண்கின்றீர் தொண்ணூற்று நான்கதுவாம் ஆண்டினையே 71

ஆண்டதுவாம் அக்ஷயமோ அந்தம்வரும் தமிழாண்டாம்
ஆண்டினிலே பிரபவம்தான் ஆதிவரும் தமிழாண்டாம்
அந்தமுற்று ஆதிவர தொண்ணூற்று நான்கும்வர
அந்தாதி அதற்கமய எல்லாமும் திருவுளமே 72

திருவுளம்தான் கனிந்திடுவீர் ஐயா உம் பொன்னடிக்கே
மீளாதோர் அடிமையென ஆளுற்றோம் ஆளுறவே
ஒருகணம்தான் மனமிறங்கி அருளிடுவீர் ஏழையற்கே
திருநாளாம் ஜெயந்திவிழாக் கண்குளிரக் காண்பதற்கே 73

காண்பதற்கே மங்களமாம் மஞ்சளொடு குங்குமம்
கொத்தோடு வாழைமரம் மாவிலையில் தோரணமும்
காமாட்சி தேவியர்போல் ஸ்வாஸினியர் கூட்டமுடன்
கேட்டிடலாம் மங்களமாய் வேதமொடு வாத்தியங்கள் 74

வாத்தியங்கள் வேதமுடன் வீதிஎலாம் ஒலிமுழங்க
பூத்தேரில் பவனிவர எம்பெருமான் எழுந்தருள
திருவடத்தை அன்பரெலாம் இழுக்கத்தேர் ஊர்ந்துவர
திருவீதி உலாக்கண்டே அருள்புரிவீர் நாயகரே 75

நாயகர்நீர் கண்டிடுவீர் "ஜெயந்திவிழா" பலகோடி
நானிலம்தான் உள்ளளவும் தேவியுடன் தான்கூடி
நிறைபொருளாய் நின்றிடுவீர் குறைவில்லா நிறைவாகி
நிலைத்திடுவீர் நீர் ஒன்றே அழிவில்லா நிலை பொருளாய் 76

நிலை பொருளே நீர் அறிந்து ஓதிடுவீர் திரிகாலம்
நலம்பெறவே காத்திடுவீர் அவர் நலமே எந்நாளும்
நயம்படவே பக்தரிடம் பலகேட்டோம் சம்பவமும்
இயம்பிடத்தான் போதிடுமோ யாமறியோம் இக்கவிதை 77

இக்கவிதை இயம்பிட்டால் எம்பெருமான் பெருமையெலாம்
எழுதிடலாம் ஒரு கோடி எட்டுக்கும் பாட்டுவரும்
"அந்தாதி" ஒரு நூற்று எட்டிதுவோ சிறுதுளியாம்
எந்தைகுரு பெருமையதோ பெருக்குபெரு வெள்ளமுமாம் 78

பெருவெள்ளம் போல்கருணை மழைதன்னைத் தான் பொழிந்தே
திருமணமாம் வைபவங்கள் அதிசயமாய் முடித்துவைத்தீர்
தரமறுப்பீர் உத்தரவை தடுத்திடவே வரும்விபத்தை
ஈரிடத்தே ஓர்நாளில் காட்சி தந்தீர் பக்தருக்கே 79

பக்தருக்கு அருளிடவே பாருதித்தீர் ஈஸ்வரரே
பார்வதிக்கு நாயகரே சங்கரரே சத்குருவே

பாரினுக்கே ஓர் குருவாய் வந்தவரே கயிலையரே
பரம்பொருளாய்ப் பார்க்கின்றோம் பாடிடுவோம் சோதியரே 80

சோதிமய மானவரே சத்குருவே சங்கரரே
பாதியுடல் நாயகியாம் பார்வதிக்குத் தந்தவரே
ஆதியிலா அந்தமிலா நடம்புரியும் தில்லையரே
வேதமென அந்தாதி நிறைபொருளாய் நிறைந்தவரே 81

நிறைந்தவரே வேதமோடு நாதமதில் திகழ்பவரே
அறிந்தவரே அண்டமெலாம் அணு அணுவாய்த் தெரிந்தவரே
திறந்தவரே மனக்கதவை மாசகற்றி புகுந்தவரே
அருந்தமிழில் சந்தமொடு அருட்கவிதை பொழிந்தவரே 82

பொழிந்திடுநல் பூக்களுக்கே புகலிடமாம் பதத்தவரே
விழித்திடுமெம் விழிகளுக்கே விருந்தாகும் வித்தகரே
தொழுதிடுவோர் துயர் துடைக்கும் தெய்வமெனத் திகழ்பவரே
எழுதிடுமோர் எழுத்தெல்லாம் இழைந்தோடி இணைத்தவரே 83

இணைந்தவரே எம்மனதில் தேனெனவே இனித்தவரே
இருந்தவரே எம்நாவில் இசைமழையாய் இசைந்தவரே
பிணைந்தவரே மங்கையவள் மீனாளை மணந்தவரே
அளித்தவரே மகிழ்வெல்லாம் அளித்துமனம் களித்தவரே 84

களித்தவரே காமகோடி பீடமதில் சொலித்தவரே
நிலைத்தவரே காஞ்சிவளர் காமாட்சி மனத்தவரே
அலர்ந்தவரே ஆதிகுரு சங்கரராய் மலர்ந்தவரே
அருள்பவரே அறுபத்து எட்டினிலே ஒளிர்பவரே 85

ஒளிர்பவராய் ஓங்குபுகழ் சங்கரராய் வந்ததுவும்
அருள்பவராய் குருசந்த்ரசேகரராய் வந்ததுவும்
அனைத்துலகம் தனக்கிங்கே ஓர்குருவாய் வந்ததுவும்
அன்புருவாம் ஈஸ்வரரே ஆதிபர மேஸ்வரரே 86

ஆதிபர மேஸ்வரரே வேதபுரி ஈஸ்வரரே
ஆரூர்த் தியாகேசரரே ஸ்ரீ கண்ட ஈஸ்வரரே
ஆதியரு ணாசலரே சோதிவடி வானவரே
குருநாத பாலனையே தோளெடுத்த தந்தையரே 87

தந்தையரே கந்தனொடு கணபதியைத் தந்தவரே
முந்தைவினை போக்கிடவே குருமுனியாய் வந்தவரே
சிந்தைகவர் சுந்தரரே எந்தைகுரு சங்கரரே
நந்தனவன் சிந்தையரே நடராஜ நலமணியே 88

நலமணியே, நஞ்சுண்ட நீலகண்டம் நீர்தானே?
நாயன்மார் சிந்தைகவர் சதாசிவம் நீர்தானே?
நாயகியாம் மீனாளின் மகாதேவர் நீர்தானே?
நலமளிக்கும் கயிலைபதி சாம்பசிவம் நீர்தானே? 89

நீர்தானே சர்வக்ஞன் உலகனைத்தும் அறிந்ததனால்
நீர்சர்வ வியாபியுமாம் நிலமனைத்தும் நிறைந்ததனால்
நீர்தானே பரம்பிரம்மம் பரம்பொருளும் நீர்தானே?
நீர்தானே ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜகத்குருவாய் அலர்ந்ததுமே 90

அலர்ந்தீரே அறுபத்து மூவர் மனம் மலர்ந்தீரே

அடியவர்கள் அதுபோதும் எனமகிழ்ந்தே இருந்தீரோ?
அறுபத்து நான்கினுக்கு உடையவரைப் படைத்தீரோ?
ஆண்டாண்டு தேடியவர் கிடைத்தாரா களைத்தீரே 91

களைத்தீரா திருமதுரை விளையாட்டில் களைத்தீரா?
களைத்தீரா தென்மதுரை நகரமைத்துக் களைத்தீரா?
களைத்தீரா தேவிமணம் கொண்டதினால் களைத்தீரா?
களைத்தீரா திருநடனம் ஆடியதால் மலைத்தீரா? 92

மலைத்தீரா "பிட்டுக்கு மண்சுமந்து" மலைத்தீரா
மலைத்தீரா "நரிபரியாய்" ஆக்கியதால் மலைத்தீரா
இளைத்தீரா "அன்னம் வரக்குழி எடுத்து" இளைத்தீரா
இளைத்தீரா "ஏழுகடல் அழைத்ததனால்" இளைத்தீரா 93

இளைத்தீரா "வீதியெலாம் வளைவிற்று" இளைத்தீரா
களைத்தீரா "மாமனென வாக்குரைத்து" களைத்தீரா
அளித்தீரா "நான்மேகம் நான்மாடக்" கூடல்வர
அழைத்தீரா "வைகைநதி தென்மதுரைத்" தேடிவர 94

தேடிவர அயனுடனே மாலவரும் தேடிவர
தேடவொணாத் தேவனென திருமலையாய்க் காட்சிதர
அடிமுடியே காணாத அசலனுமாய் நின்றபிரான்
அவனியிலே அருணனென அவதரித்தீர் குருமணியே 95

குருமணியே குருமணியே "கைலாச" குருமணியே
குருமணியே குருமணியே "கேதார" குருமணியே
குருமணியே குருமணியே "காமாட்சி" குருமணியே

குருமணியே குருமணியே "காமகோடி" தவமுனியே 96

தவமுனியே தரணியெலாம் போற்றிடுவோர் தவமுனியே
அவனியெலாம் நலம்பெறவே தவமியற்றும் தவமுனியே
தவமுனியே மாத்தவம்செய் மாமோனத் தவமுனியே
தவமுனியே திரிகால ஞானியரே அம்பலத்தீர் 97

அம்பலத்தே நீர் ஆடும் திருநடனம் தனைக்காண
இம்மைக்கும் தரிசனமே பயனென்று உமைக்காண
செம்மையுளம் கொண்டவனாம் நந்தனுக்கும் தரிசனத்தை
நன்பயனாய்த் தந்தகதை நாடறியும் நிஜம்தானா? 98

நிஜம்தானா நவின்றிடுவீர் யாம்கேட்போம் உமைப்பற்றி
நாடறிய ஊரறிய உரைத்திடுவோம் அவைப்பற்றி
உண்மையெனில் செவிகேளும் இல்லையெனில் எமைச்சாடும்
வாதிடுவீர் வழக்குரைப்பீர் உமையறிவோம் மென உரைத்தோம் 99

உரைத்திடுவீர் ஒன்றிருக்கப் பொன்மயமாய் தில்லையிலே
திருமதுரை ஏன்கொண்டீர் வெள்ளியிலோர் அம்பலமே?
மீன் விழியாள் ஆண்டாளோ? தென் மதுரை ஆண்டதுவோ?
நீர்செய்த கூற்றுத்தான் நிலமனைத்தும் பரவியதோ? 100

பரப்பிடவே சைவமெனும் திருச்சமயம் தழைத்திடவே
பிறப்பித்தீர் ஆட்கொண்டீர் ஆட்டுவித்தீர் அந்நால்வர்
அருந்தமிழில் பொழிந்ததெலாம் அருட்கவிதை மழைதானே?
அவையெல்லாம் அகமிருந்து நீர் கொடுத்த மொழிதானே? 101

மொழியறியாப் பாலகனை அழச் செய்தீர் பாலினுக்கே
வழிதெரிந்தே உமையுடனே வலம்வந்தீர் விடையேறி
மொழிந்ததெலாம் ஞானமெனும் தேனமுதப் பாலதனால்
மொழிதெரிந்தா தொடங்கிட்டான் "தோடுடைய செவியனென" 102

செவிமடுப்பீர் சிவபுரத்து நந்தவனச் சுந்தரனை
புவிபிறக்கச் செய்வித்தீர் புகுந்திட்டீர் மணநாளில்
வாதிட்டீர் வழக்குரைத்தீர் அடிமையென உடனழைத்தீர்
ஆட்கொண்டீர் பாட்டுவித்தீர் "பித்தா பிறை சூடி" என 103

பிறைசூடி நீர் கொடுத்த நாவண்மை நலத்தாலே
மறைபோற்றும் நாதருமை நற்றுணையே என நவின்றார்
அருங்கலமாம் நாவினுக்கு நமச்சிவாயம் எனச் சொல்லி
திருநாவுக் கரசரென அப்பரென உயர்ந்தாரே 104

உயர்ந்தாரே ஈசருமைக் குருமணியாய்க் கண்டதினால்
மலர்ந்தாரே திருவாக்கால் மாணிக்க வாசகராய்
மொழிந்தாரே நாதன்தாள் வாழ்கவென வாழ்த்துரைத்தே
அளித்தாரே தேனமுதம் தந்ததிரு வாசகத்தில் 105

வாசகத்தில் வடிக்க ஒணா உம்புகழைப் பாடுதற்கு
வார்த்தைகளும் போதிடுமோ? வளர் தமிழ்தான் போதிடுமோ?
ஒளிவீசும் ஆதவன்முன் கற்பூர சோதியென
எளியோரின் தெருப்பாட்டும் இறையுமக்குத் திருப்பாட்டே 106

திருப்பாட்டால் கசிந்துருகி உமைக்கண்ட நாயன்மார்
ஒருகணமே தரிசிக்க புரிந்ததுவோ பெருந்தவமாம்

பலகோடி நாரணரும் ப்ரம்மருமே போற்றிமிரு
பதமலர்யாம் தரிசிக்க எத்தவம்தான் இழைத்தோமோ 107

இழைத்திட்டோம் புண்ணியம் ஓர் கோடியுமைக் கண்டிடவே
அழைத்திட்டோம் அகம்புகுவீர் அளித்திடுவீர் ஆசியருள்
பொழுதெல்லாம் உமைமறவா நிலை தருவீர் உமை ஈசா
தொழுதிட்டோம் பிறப்பறுத்து பதம் சேர்ப்பீர் வாழியவே 108

மங்களம்

சுபம்